NEWSPAPER: **MALAI THAMILAGAM**

PUBLISHED ON: **MAR 19 2016**

# சாய்ராம் மேலாண்மை கல்லூரியில் மத்திய பட்ஜெட் பற்றி கலந்துரையாடல்

**சென்னை, மார்ச் 19-**

சென்னை மேற்கு தாம்பரத்தில் உள்ள சாய்ராம் மேலாண்மை கல்லூரி சார்பில் மத்திய பட்ஜெட்-2016 குறித்த கலந்துரையாடல் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் டி.கே.ரங்கராஜன் எம்.பி., காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் அமெரிக்கா நாராயணன், தமிழக பா.ஜ., செய்தி தொடர்பாளர் இராம.சுப்பிரமணியன், மனித வள மேம்பாட்டு ஆலோசகர் சோம.வள்ளியப்பன் ஆகியோர் கலந்து கொண்டு பட்ஜெட் குறித்த கருத்துகளை எடுத்துரைத்தனர்.

இதில் மாறன் வரவேற்புரையாற்றினார். கல்லூரி முதல்வர்சி.வி.ஜெயக்குமார் அறிமுக உரையாற்றினார்.




நிகழ்ச்சியில் டி.கே.ரங்கராஜன் பேசுகையில், நாட்டு மக்களுக்கு நல்ல குடிநீர், கல்வி, சுகாதாரம், தொழில் வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

அமெரிக்க நாராயணன் பேசும்போது, பெரிய அளவிலான முதலீடுகள் விவசாயத்துக்கு ஒதுக்கப்பட்டதாக தெரிவித்தார்.

சோம.வள்ளியப்பன் பேசும்போது, நாட்டு குடிமக்களுக்கான உரிமை மற்றும் கணினிமயமாக்கப்பட்ட பத்திரப்பதிவு, நெடுஞ்சாலை துறைக்கு பெரிய அளவில் நிதி ஒதுக்கப்பட்டது வரவேற்கத்தக்கது என கூறினார்.

இராம.சுப்பிரமணியன் பேசுகையில், இந்த பட்ஜெட் முழுவதும் விவசாயம், ஊரக வளர்ச்சி, வறுமை ஒழிப்பு மற்றும் உயர்கல்வியை மேம்படுத்துவதாக அமைந்துள்ளது என்றார்.

மாறன் பேசுகையில், விவசாய உற்பத்தி மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தை வெளிநாட்டு ஏற்றுமதியை பலப்படுத்த உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்றார்.

NEWSPAPER: **THE HINDU**

PUBLISHED ON: **MAR 21 2016**

# Education Hub

## DISCUSSION ON UNION BUDGET 2016




Sri Sairam Engineering College organised a panel discussion on Union Budget 2016 for the MBA students. The eminent panelists for discussion included T. K. Rangarajan, MP, Rajya Sabha CPI (M); Americai V. Narayanan, spokesperson of Tamil Nadu Congress; Dr. N. Ramasubramanyan, leading economist and financial consultant; and Soma Valliyappan, writer, author, speaker and trainer. Dr. K Maran, Director, SIMS welcome the gathering, while Dr. C.V. Jayakumar, Principal, Sri Sairam Engineering College introduced the panel members. Dr. K. Soundaryapandiyan delivered the vote of thanks.

NEWSPAPER: **DINAMANI**

PUBLISHED ON: **MAR 19 2016**

# காங்கிரஸ் அரசின் தொடர்ச்சியாக பாஜக பட்ஜெட்

## கல்லூரியில் நடைபெற்ற விவாதத்தில் டி.கே.ரங்கராஜன் பேச்சு

தாம்பரம், மார்ச் 18: காங்கிரஸ் அரசின் நிதிநிலை அறிக்கையின் தொடர்ச்சியாக மத்திய நிதி அமைச்சர் அருண் ஜேட்லி அண்மையில் சமர்ப்பித்த இடைக்கால நிதி அறிக்கையும் உள்ளது என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலங்களவை உறுப்பினர் டி.கே.ரங்கராஜன் கூறினார்.

மத்திய அரசின் நிதி நிலை அறிக்கை குறித்த விவாதம், மேற்கு தாம்பரம் ஸ்ரீசாய்ராம் பொறியியல் கல்லூரியில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில் டி.கே.ரங்கராஜன் மேலும் பேசியது:-

முன்னாள் நிதி அமைச்சர் ப.சிதம்பரம் எங்கு விட்டுச் சென்றாரோ, அதை இன்றைய நிதி அமைச்சர் அருண் ஜேட்லி தொடர்ந்துள்ளார்.

உலகெங்கும் பல நாடுகளில் 2008-ஆம் ஆண்டு தொடங்கிய பொருளாதாரச் சரிவு இன்னும் சீரமைக்கப்படவில்லை. ஐரோப்பிய பொருளாதாரம் கடும் நெருக்கடியில் உள்ளது. சீனா உள்ளிட்ட பல் வேறு நாடுகளின் பொருளாதாரம் கீழே சரிந்து கொண்டிருக்கிறது.




விவாத அரங்கில் பேசிய மாநிலங்களவை உறுப்பினர் டி.கே.ரங்கராஜன். உடன் (இடமிருந்து) கல்லூரி முதல்வர் சி.வி.ஜெயகுமார், நடேசன் வித்யாசாலா பள்ளி தாளாளர் என்.இராமசுப்பிரமணியன், அமெரிக்கை நாராயணன், பத்திரிகையாளர் சோம.வள்ளியப்பன், துறைத் தலைவர் கே.மாறன்.

இந்திய ஏற்றுமதி சுருங்கி, இறக்குமதி அதிகரித்துகொண்டிருக்கிறது. வேலைவாய்ப்புகளை அதிகரிக்க நடவடிக்கைஇல்லை.தொழில் நுட்பத் திறன்களை மேம்படுத்த ஒதுக்கப்பட்ட நிதியில் மூன்றில் ஒரு பங்குகூட செலவழிக்கப்படவில்லை. வசாயப் பொருளாதாரத்தை மேம்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் இல்லை. கடந்த இரண்டு ஆண்டுகளாக 320 மாவட்டங்களில் வறட்சி நிலவுகிறது. எதிர்பார்த்த மகசூல் இல்லாமல் விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ளும் அவலநிலை உள்ளது. தற்போதுள்ள 2 சதவீத விவசாயப் பொருளாதாரம், 14 சதவீதமாகஉயர்த்தப்பட்டால்தான் 2022-ஆம் ஆண்டாவது பொருளாதார இலக்கை நாம் எட்ட முடியும் என்று முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்துள்ளார்.

பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளில் 1.96 கோடி பேர் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தும் அவலம் அதிகரித்து வருகிறது. சுகாதாரத் துறையைப் பொருத்தவரை, அதை தனியாருக்குத் தாரை வார்த்து தனது பொறுப்பை அரசு சுருக்கிக் கொண்டுள்ளது என்றார்.

நிகழ்ச்சியில் அமெரிக்கை நாராயணன் பேசியதாவது:-

விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு விலை உத்தரவாதம் வழங்கவேண்டும். நெல், கரும்புக்கு கொள்முதல் விலையை உயர்த்திக் கொடுக்க முன் வரும் மாநில அரசுகளை மத்திய அரசு தடுக்கக் கூடாது என்றார்.

பத்திரிகையாளர் சோம.வள்ளியப்பன், நடேசன் வித்யாசாலா பள்ளியின் தாளாளரும், பொருளாதார ஆலோசகருமான என்.ராமசுப்ரமணியன், கல்லூரியின் வணிக மேலாண்மைத் துறைத் தலைவர் கே.மாறன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.